# பொல்கஹவெல பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 15 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------

இவ் அறிக்கையின் 1.3.2, 1.3.6, 1.3.7 பந்திகளில் விவரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்த நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

----------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதி ரூபா 28,018,693 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 24,861,001 என ரூபா 3,157,692 குறைவாக எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) பௌதீக திட்டமிடல் பாதைகள், காணி மற்றும் கட்டடங்கள் நிகழ்ச்சித் திட்டத்தில் நிர்மாண வேலை உதவி என காட்டப்பட்டிருந்த ரூபா 50,644,722 பெறுமதியுள்ள பொது நிருவாக நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய கப் வண்டி ஒன்றுக்கு கிடைத்துள்ள மானியம் ரூபா 4,187,200 அடங்குகின்றது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலை உதவி ரூபா 32,204,419 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 46,457,522 என ரூபா 14,253,103 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலை செலவுகள் ரூபா 36,316,804 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 52,690,325 என ரூபா 16,373,521 இனால் மிகையாக எடுக்கப்பட்டுள்ளது.

(உ) கொங்கிரீட் அச்சுக் கல் செயற்திட்டத்தன் வருமானமாகிய ரூபா 3,368,060 இற்கான பெறுமதி பௌதீக திட்டமிடல் பாதைகள் காணி மற்றும் கட்டடம் நிகழ்ச்சித் திட்டத்தில் 3/62 மீண்டுவரும் வருமானத் தலைப்பிற்கு கணக்கீடு செய்யப்பட்டு அதற்கான செலவு ஆகிய ரூபா 4,695,567 இனை 309 மூலதன செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதன் மூலம் 309 மூலதன செலவுக் கணக்கின் செலவு மற்றும் கொங்கிரீட் அச்சுக்கள் செயற்திட்டச் செலவு அதே தொகையால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது பொது வழங்கல் கடன் கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 10,013,747 தொகையில் நிர்மாண வேலை கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 7,249,891 உம் அடங்குகின்றது.

(எ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதி ரூபா 30,471,483 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 32,053,107 என ரூபா 1,581,624 இனால் மிகையாக எடுக்கப்பட்டுள்ளது.

(ஏ) மீளாய்வாண்டு தொடர்பாக நிலையான வைப்பு வட்டி ரூபா 3,133,050 தொகை எனினும், அவை நிதிக் கூற்றுக்களில் ரூபா 5,983,541 என ரூபா 2,850,491 இனால் மிகையாக எடுக்கபட்டுள்ளது.

(ஐ) மீளாய்வாண்டின் போது காணி துண்டுகளின் வரைபுகளை அங்கீகரிக்கும் போது ‘‘ஹதலிஸ்பகுவ பூவெலேஹேன’’ என்னும் காணியில் இருந்து சபைக்கு கிடைத்திருந்த ரூபா 3,485,000 பெறுமதியான 41 பர்சஸ் காணியினை சொத்துக் கணக்கிற்கு எடுக்கப்படாமையால் வருட இறுதியில் உள்ளவாறு காணிகள் மற்றும் கட்டடங்களின் பெறுமதி அதே தொகையால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மோட்டார் வாகனம் மற்றும் மாட்டு வண்டி பெறுமதி ரூபா 17,159,568 எனினும், நிதிக் கூற்றுக்ளில் அவை ரூபா 18,436,118 என ரூபா 1,276,550 இனால் மிகையாக எடுக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,148,501 இற்கான தளபாடங்களை மூலதனப்படுத்தும் போது தளபாடக் கணக்கு ‘‘வரவு’’ வைக்கப்பட்டு மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கு ‘‘செலவு’’ வைப்பதற்கு பதிலாக நாட்குறிப்பு இலக்கம் 25 இன் மூலம் தளபாடங்கள் பொருத்துக்கள் கணக்கு வரவு வைக்கப்பட்டு பொது நிருவாக நிகழ்ச்சித் திட்டம் செலவு தலைப்பு 103 இற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கு மீதி ரூபா 1,148,501 இனால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் போது வீரம்புகெதர உப அலுவலகத்தின் சிறுவர் பூங்கா திருத்த வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு ரூபா 1,485,974 தொகை மற்றும் பிரதேச சபை அலுவலகக் கட்டடத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 10,100,455 இனை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(க) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய முத்திரை கட்டண மீதி ரூபா 25,986 எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 646,320 இற்கான வரவு மீதி ஒன்றென எடுக்கப்பட்டிருந்தது.

(ங) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த பெறுமதி கூட்டிய வரி ரூபா 70,725 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 26,028 என ரூபா 44,697 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ச) மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 29,581,274 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 28,616,403 என ரூபா 964,871 இனால் குறைவாக எடுக்கப்பட்டிருந்தது. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்பு தொகை ரூபா 1,665,789 இனைக் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஞ) மீளாய்வாண்டிற்கான வீதவரி வருமானம் ரூபா 6,649,817 தொகையில் காணி விற்பனவு வரி ரூபா 1,285,182 உம் கைத்தொழில் வரி ரூபா 776,832 உம் உட்பட்டிருந்தது.

(ட) மீளாய்வாண்டிற்காக முத்திரை கட்டண வருமானம் ரூபா 18,430,029 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 52,778,955 தொகை என ரூபா 34,348,926 மிகையாக எடுக்கப்பட்டிருந்தது. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரை கட்டண மீதி ரூபா 18,430,029 எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 15,000,000 தொகை என ரூபா 3,430,029 இனால் குறைவாக எடுக்கப்பட்டிருந்தது.

(ண) மீளாய்வாண்டு தொடர்பாக நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 2,556,876 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 2,949,814 என ரூபா 392,938 மிகையாக எடுக்கப்பட்டிருந்தது. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதி மன்ற தண்டப்பணம் ரூபா 815,167 எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 284,416 என ரூபா 530,751 இனால் குறைவாக எடுக்கப்பட்டிருந்தது.

(த) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலையான வைப்பு மீதி ரூபா 28,635,788 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 27,435,788 தொகை என ரூபா 1,200,000 குறைவாக எடுக்கப்பட்டிருந்தது.

1.3.2 தொங்கல் கணக்குகள்

-----------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பணம் மாற்றல் என நடைமுறை சொத்துக்களில் காசு மீதியுடன் கூட்டியிருந்த ரூபா 8,032,660 இற்கான தொங்கல் தன்மையுள்ள வரவு மீதியொன்று காணப்பட்டது.

1.3.3 எதிர்பாராத பொறுப்புக்கள்

-----------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதயத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 8,003,966 ஆக காணப்பட்டது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காட்டப்பட்டிருந்த மீதிகளின் கீழ் 15 கணக்கு விடயங்களில் கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் நேரொத்த பெறுமதிகளிடையே ரூபா 42,603,703 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 53,008,886 ஆக காணப்பட்டதுன் அவற்றில் ரூபா 49,912,499 தொடர்பாக காலப்பகுப்பாய்வு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 53,877,213 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 1,990,610 உம் 3 வருடங்களை மிகைத்த காலத்தை சேர்ந்தவை.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 21,757,567 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

1.3.7 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏற்பட்டிருந்த விதம், பெறுமதி, அமைக்கப்பட்டுள்ள விதம் ஆகியவற்றை இனங்காணாமல் மற்றும் அங்கீகாரம் இன்றி முன்னைய வருடங்களில் நிலுவையாக காணப்பட்ட ஏனைய நிர்மாண வேலை கடன்பட்டோர் ரூபா 2,344,092 இற்கான பெறுமதியினை 5 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொது (நடைமுறை) வங்கி கணக்கு தொடர்பாக 2012 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் ரூபா 1,075,666 இற்கான வங்கி மேலதிகப்பற்று மீதியொன்று காணப்பட்ட போதும் 2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு அப் பெறுமதி ரூபா 2,063,370 வரவு மீதியொன்று என காசேட்டுக்கு எடுக்கப்பட்டிருந்தது. அதே போல் 2012 திசெம்பர் வங்கி இணக்கக் கூற்றில் ரூபா 7,037,247 இற்கான இனங்காணப்படாத கொடுப்பனவு என சீராக்கல் ஒன்று காணப்பட்டதுடன் 2013 ஜனவரி வங்கி இணக்கக் கூற்றில் அச் சீராக்கல் அகற்றப்பட்டிருந்தது. அவ் வித்தியாசங்கள் மேற்கொள்வதற்காக காரணம் அல்லது அதற்கான அங்கீகாரம் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 48,748,066 ஆக

காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 8,367,024 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 57,115,090 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவுகளில் ரூபா 51,132,341 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 68,250,146 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 31,630,261 வரை குறைந்திருந்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 115,246,362 இல் நூற்றிற்கு 83 ஆகிய ரூபா 95,819,356 உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம் முத்திரை கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளது. அதே போல மூலதன வருமானம் அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 51,132,341 இன் நூற்றிற்கு 63 என ரூபா 32,204,419 தொகை ஒன்று கமநெகும, வயம்ப புபுதுவ போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைத்த பணமாகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 66,498,297 இல் நுற்றிற்கு 72 ஆகிய ரூபா 47,754,183 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 60 ஆக ரூபா 28,616,403 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மூலதன செலவாகிய ரூபா 68,250,146 இல் நூற்றிற்கு 6 ஆகிய ரூபா 4,112,385 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதியான நூற்றிற்கு 94 ஆகிய ரூபா 64,137,761 இற்கான தொகை வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்காக செலவிடப்பட்ட பணமாகும்.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றுகை

----------------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், வர்த்தக வரி, கடை வாடகை, குத்தகை போன்ற வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக குறிப்பிட்ட அதிகாரம் ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை எனினும், சபையின் வருமானம் சேகரிப்பாளரினால் வருடம் பூராகவும் வீதவரி மற்றும் வியாபார அனுமதிப் பத்திரம் போன்ற வருமானங்கள் வெளிக்களத்திலேயே சேகரிக்கப்பட்டிருந்தது.

2.3.2 வீதவரி

-----------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபையின் தலைமை அலுவலக அதிகாரப் பிரதேசம் தொடர்பாக 3360 அலகுகளின் கீழ் ரூபா 1,762,334 பில் போடப்பட்டிருந்தன. அத்துடன் அவற்றில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு 1195 அலகுகள் தொடர்பாக

ரூபா 1,383,408 இற்கான வீதவரி நிலுவை ஒன்று காணப்பட்டது. அவற்றில் நிலுவைப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. 41 அலகுகள் தொடர்பாக ரூபா 147,330 தொடர்பாக மாத்திரமே.

(ஆ) பொதுஹர உப அலுவலக அதிகார பிரதேசம் தொடர்பாக 1900 அலகுகளின் கீழ் வருடாந்தம் ரூபா 1,094,568 தொகை ஒன்று பில் போடப்பட்டிருந்ததுடன் அவ் பில் போடப்பட்டவைகள் மீது நூற்றிற்கு 127 என ரூபா 1,437,698 இற்கான நிலுவை மீதி ஒன்றும், வீரம்புகெதர உப அலுவலக அதிகாரப் பிரதேசம் தொடர்பாக 454 அலகுகளின் கீழ் ரூபா 308,130 இற்காக நிலுவை மீதி ஒன்றும், மற்றும் ஹதலிஸ்பஹுவே உப அலுவலகம் தொடர்பாக ரூபா 2,183,085 இற்கான நிலுவை மீதி ஒன்றும் மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்டது.

2.3.3 குத்தகை

--------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த குத்தகைக்கு கொடுத்தலின் கீழ் 2007 – 2012 காலப்பகுதியில் குறிப்பிட்ட கொடுப்பனவு செலுத்தத் தவறிய குத்தகையாளர்களிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 18 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 1,330,314 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது.

(ஆ) பொதுஹர உப அலுவலக அதிகார பிரதேசத்தை சேர்ந்த சொத்துக்கள் குத்தகைக்கு கொடுத்தலின் கீழ் 2011 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 28,149 உம் மற்றும் 12 சந்தர்ப்பங்கள் தொடர்பாக 1998 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 184,596 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது.

2.3.4 வாணிப வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம்

--------------------------------------------------------------------------------------------

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி 59 முதல் 67 வரை காணப்படும் விதிகளின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 150(1) மற்றும் 152(1) இன் பிரகாரம், கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக முயற்சிகள் தொடர்பான பட்டியல் ஒன்று தயாரிக்கட்டு செயலாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும். அதே போல் சபையினால் விதிக்கப்பட்ட வரி 7 நாட்களில் செலுத்துமாறு பி.ச. 26 படிவத்தின் மூலம் குறிப்பிட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட வேண்டும் சபையினால் அவ்வாறு செய்திருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

--------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 7,192 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவ் வீதி விளக்குகளின் பராமரிப்புக்காக உபகரண செலவு ரூபா 322,307 மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.2 முகாமைத்துவ திறமையின்மை

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் 2009 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 853 கட்டட விண்ணப்பங்களில் மீளாய்வாண்டு இறுதி வரை இணக்கச் சான்றிதழ்கள் பெற்றிருக்காத இடங்கள் 793 இடங்கள் காணப்பட்டன. அக் கட்டடங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததால் சபையின் துணை விதயின் பிரகாரம் ரூபா 222,040 இற்கான கட்டட இணக்கச் சான்றிதழ் வருமானம் ஒன்றும் குறிப்பிட்ட கட்டடங்களின் நிர்மாண வேலைகள் முடிவடைந்தில்லை எனின் அனுமதிப்பத்திரத்தின் காலத்தை நீடிப்பதற்கான கட்டணம் மீதான வருமானத்தையும் அறவீடு செய்வதற்கு இயலாதிருந்தது.

(ஆ) சொத்துக்கள் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக 3 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 246,335 இற்கான நிலுவை தொகையினை அறவீடு செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என வருமானப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் வழக்கு கோவைகளில் வழக்கு அறிக்கையின் பிரதிகள் அல்லது குறிப்பிட்ட வழக்குகளின் முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை. அதே போல் 4 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 469,138 தொகை சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக வருமான பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டதென இனங் காணக்கூடியதாக இருக்கவில்லை. அதே போல் 11 சந்தர்ப்பங்களின் கீழ் காணப்பட்ட ரூபா 614,841 இற்கான நிலுவை தொகை தொடர்பாக அறவீடு செய்வதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகளை இனங்கண்டிருக்கவில்லை.

(இ) பஸ் நிலையச் சிற்றுண்டிச் சாலை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் போது குருநாகல் நீதிமன்றத்தினால் முறைப்பாட்டு சாராரான வாடிக்கையாளருக்கு சார்பான விதமாக 2011 ஆண்டின் போது வழங்கியிருந்த தீர்ப்புக்கு எதிராக சபை 2012 ஆண்டின் போது மேல் முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்த போதும் அம் மேன்முறையீட்டின் முன்னேற்றம் தொடர்பாக சபையினால் பின் தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எனினும் சபையனால் மாதத்திற்கு ரூபா 7,000 வீதம் பில் போடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 638,597 நிலுவையொன்று காணப்பட்டது.

(ஈ) கொடவெல வாராந்த சந்தை சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு கொடுப்பதற்காக 2008 ஆண்டு முதல் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் குறிப்பிட்ட சாராரினால் சிற்றுண்டிச்சாலை நடத்தியிருந்ததுடன் பில் போடப்படல் அல்லது வாடகை செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதே போல் 2008 ஆண்டு தொடர்பாக காணப்பட்ட ரூபா 9,920 இற்கான நிலுவை வாடகை ஒன்றும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஜனவரி 29 திகதி நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது முறைப்பாட்டு சாராரான சபையின் வேண்டுகோளின் பிரகாரம் மதிப்பீட்டு கட்டணம் செலுத்த வேண்டுமென்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. சபையினால் 2013 மே மாதம் முதல் ரூபா 2,000 மாதாந்த வாடகைக்கு குறிப்பிட்ட வாடகையாளருடன் புதிய உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2008 ஆண்டு முதல் காணப்பட்ட நிலுவை தொகை ரூபா 9,920 இனையும் அறவீடு செய்துள்ளது. எனினும், 2008 ஆண்டு முதல் 2013 வரை விசாரணை மேற்கொள்ளப்பட்ட வழக்கை பின் வாங்கிய காரணத்தினால் அந்த வழக்கு தொடர்பாக செலவிடப்பட்ட சட்டத்தரணிக் கட்டணம் பயனற்ற செலவு ஒன்றாகியுள்ளது. 2009 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 60,000 வாடகை வருமானத்தையும் சபை இழந்துள்ளது.

(உ) மீளாய்வாண்டின் போது சபை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக குறிப்பிட்ட ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த ரூபா 1,948,036 இற்கான பெறுமதி கூட்டிய வரியின் பெறுமதி சபையினால் செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டியவரியினை கணிக்கும் போது வழங்கப்படும் கழிவுகள் கீழ் கழிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(அ) சபைக்கு சொந்தமான ஆதனங்களை இனங்கண்டு சட்ட ரீதியாக உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமையால் ''ஒருலியத்த இடத்தில்'' அங்கீகாரமற்ற சில வீடுகள் மற்றும் முஸ்லிம் பள்ளி ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அத்துடன் ''பொதுஹர குரிபொத்த விக்டர் ரேன்ஜ்'' ஏல விற்பனவு காணியில் பொது விடயங்களுக்காக ஒதுக்கிய பகுதியில் அங்கீகாரம் இன்றி நபர் ஒருவர் வசித்து வந்தார்.

(ஆ) காணி மறுசீரமைப்பு ஆணைக் குழு பணிப்பாளரின் 2003 ஜூன் 03 திகதிய கடிதத்தின் மூலம் சுமார் 3 ஏக்கர் கொண்ட வீரம்புகெதர சந்தை பூமி சபைக்கு உரித்தாக்குவதற்காக விதந்துரைக்கப்பட்டிருந்த போதும் சபையினால் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் 2012 ஆண்டின் போது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் அந்த காணியின் காணி உறுதி ஒன்றின் மூலம் தனிப்பட்ட சாராருக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. மேலும் சபை அந்த காணியை இழந்த காரணத்தினால் ஆதனம் ஒன்று என கணிக்கப்பட்ட வாராந்த சந்தையை நடத்துவது தொடர்பாக சிக்கல் ஒன்று ஏற்பட்டுள்ளது. அத்துடன் சபையின் இறுதிக் கணக்குகளிலும் இந்த காணி சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

(இ) மொத்த கிரயம் ரூபா 597,879 இற்காக மாடு அறுக்கும் நிலையம நிர்மாணிப்பதற்கு பொது சுகாதார பரிசோதனைகளின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளாமையால் குறிப்பிட்ட கட்டடம் மாடு அறுக்கும் நிலையமாக பயன்படுத்த முடியாது காணப்பட்டது.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்